**Media Release**

உடனடி வெளியீட்டுக்காக

**ப்ராம்ப்ட்டன் நகர வணிகங்களை முன்னெடுத்துச் செல்வதற்காக "உள்ளூரை ஆதரிக்கவும்" பிரச்சாரத்தை நகர நிர்வாகம் துவக்கியுள்ளது**

ப்ராம்ப்ட்டன், ON (மே 20, 2020) – *கடைகளில் பொருட்களை வாங்குங்கல், சாப்பிடுங்கள், பரிசளியுங்கள் மற்றும் உள்ளூரை ஆதரியுங்கள்* என்று நகரவாசிகளை உற்சாகப்படுத்துவதற்காக, ப்ராம்ப்ட்டன் நகரமானது இன்றைக்கு, "உள்ளூரை ஆதரிக்கவும்" என்ற தனது பிரச்சாரத்தைத் துவக்கியுள்ளது. கோவிட்-19 (COVID-19) தொற்று பரவலானது உள்ளூர் வணிகத்தில் குறிப்பிடத்தக்க பாதிப்பை ஏற்படுத்திவிட்டது என்பதால், எப்போதைக்காட்டிலும் ப்ராம்ப்ட்டன் சமூகத்தினரின் ஆதரவு அவர்களுக்கு இப்போது தேவைப்படுகிறது.

வணிகங்கள் ஆன்லைன் ஷாப்பிங் மற்றும் வழிப்போக்கில் பொருட்களைச் சேகரித்துக் கொள்ளுதலுக்கான வாய்ப்பை வழங்க மீண்டும் தமது வியாபாரத்தை தொடங்கவிருக்கையில், கோவிட்-19 (COVID-19) தொற்று பரவல் காலத்திலும் அதற்கு அப்பாலும் உள்ளூர் பொருட்களையே நாடி வாங்குமாறு "உள்ளூரை ஆதரிக்கவும்" எனும் பிரச்சாரம், உள்ளூர் மக்களை உற்சாகப்படுத்துகிறது. உணவகத்திற்கு வெளியில் எடுத்துச் சென்றுவிடும் உணவை (பார்சல் உணவு) ஆர்டர் செய்வதிலிருந்து, பரிசு அட்டைகளை வாங்குவது வரை, தி ரோஸ் -இன் (Rose's) ஆன்லைன் நிகழ்ச்சியைப் பார்ப்பது வரை, ப்ராம்ப்ட்டனின் பல உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகளை ப்ராம்ப்ட்டன் குடியிருப்புவாசிகள் பாதுகாப்பாக அனுபவிக்க முடியும்.

பொதுமக்களும் கூட தங்களுக்கு விருப்பமான ப்ராம்ப்ட்டன் வணிகங்களுக்கு சமூக ஊடக கணக்குகள் மூலம் தங்கள் ஆதரவை தெரிவிக்கலாம்; இதனை "உள்ளூரை ஆதரிக்கவும்" எனும் படம் மற்றும் #SupportLocalBrampton என்ற ஹேஷ்டேக் மூலம் செய்யலாம்; தங்கள் சமூக ஊடகங்களின் மூலம் உள்ளூர் வணிகத்தினரை ஈடுபடுத்தலாம்.

ப்ராம்ப்ட்டன் நகரின் பொருளாதாரத்தில் உள்ளூர் வணிகங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. கோவிட்-19 (COVID-19) தொற்று வரவலின் தொடக்க காலத்தில், ப்ராம்ப்ட்டன் நகரமானது COVID-19 இன் பாதிப்புக்களை அனுபவித்து வந்தபோது, வணிகங்களுக்கு ஆதரவளிப்பதற்காக பொருளாதார ஆதரவுதருவதற்கான பணிக்குழு ஒன்றை உருவாக்கியது. இன்றுவரை, இந்த பணிக்குழுவானது வணிகங்களுடன் 5,000 க்கும் மேற்பட்ட பரஸ்பர செயல்பாடுகளைச் செய்துள்ளது மற்றும் டெலி டவுன் ஹால் (தொலைபேசி வழி மாநாடு) மூலம் கிட்டத்தட்ட 900 சிறு வணிகர்களை ஈடுபடுத்தியுள்ளது; இதில் COVID-19 இன் பாதிப்புக்கள் மற்றும் சாத்தியமான தீர்வுகள் குறித்து விவாதித்தது. கடந்த வாரத்தில், ப்ராம்ப்ட்டன் நகர சபையானது பணிக்குழுவிற்கான பொருளாதார மீட்பு யுக்திக்கு ஒப்புதல் அளித்தது; இதில் வணிகங்களை ஆதரிக்கவும் நகரத்தின் பொருளாதாரத்தை மறுதொடக்கம் செய்யவும்

உதவக்கூடிய பல முயற்சிகளில் ஒன்றாக “உள்ளூரை ஆதரிக்கவும்” எனும் பிரச்சாரத்தை உருவாக்குவதுவும் அடங்குகிறது.

மேலும் அறிய வருகை தரவும்: www.brampton.ca/supportlocal.

**அறிஞர் கூற்றுக்கள்**

“நமது நகரத்தின் பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்புவதற்கும் தொழில்முனைவோர் முதலீடு செய்ய முன் வருவதற்கும், “ உள்ளூரை ஆதரிக்கவும்” எனும் பிரச்சாரத்தில் எங்களுடன் சேருமாறு நான் குடியிருப்புவாசிகளை உற்சாகப்படுத்துகிறேன். இந்த நெருக்கடியிலிருந்து இந்த மாநகரம் மீண்டு வருவதற்கு உதவுவதில் நாம் ஒன்றாக இருந்தபடி ஒரு வித்தியாசத்தை உருவாக்க முடியும்.”

– *பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

“ இந்த பிரச்சாரத்தைத் தொடங்குவதன் மூலம், ப்ராம்ப்ட்டன் நகர வர்த்தக வாரியம் மற்றும் டவுண்டவுன் ப்ராம்ப்ட்டன் BIA ஆகியவற்றில் எங்கள் கூட்டாளிகளுடன் சேர்ந்து, உள்ளூர் மக்களை ஆதரிப்பதற்கான இயக்கத்தில் சேர குடியிருப்பாளர்களை உற்சாகப்படுத்துவதோடு, எங்கள் வணிகங்களுக்கும் எங்கள் நகரத்திற்கும் இந்த தொற்றுநோயிலிருந்து புதுவேகத்துடன் வெளியேறுவதற்கு உதவுகிறோம்.நமது சமுதாயத்தில் புதிய வேலைவாய்ப்புக்களை உருவாக்குவதற்கும் நமது பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கும் நாம் ஒன்றிணைவோமாக. நாங்கள் உண்மையிலேயே ஒன்றாக, இன்னும் அதிக வலுவுடன் இருக்கிறோம்.”

– *மைக்கேல் பல்லேஸ்ச்சி, பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் 2 & 6; உப தலைவர், பொருளாதார ஆதரவுக்கான பணிப்படை*

“முன்னெப்போதைக் காட்டிலும், ’உள்ளூரை ஆதரிப்பது’ என்பது இப்போது முக்கியமாகும் - நாம் கடினமாக உழைத்து சம்பாதித்த பணத்தை நமது சமூகத்திற்குள்ளாகவே வைத்திருப்போமாக; மேலும் கோவிட்-19 (COVID-19) தொற்று பரவலின் பேரழிவு கொண்ட தாக்கங்களிலிருந்து வணிகங்களை மீட்க உதவுவோமாக. ப்ராம்ப்ட்டன் நகரின் சமுதாய உணர்வைப் பற்றி நாம் எப்போதும் பெருமை கொண்டவர்கள் - நமது வணிகங்களை நாம் எந்த அளவுக்கு பாராட்டுகிறோம் என்பதைக் காண்பிக்கும் நேரம் இதுவே.”

– *பால் வின்செண்ட், பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் 1 & 5; உப தலைவர், பொருளாதார ஆதரவுக்கான பணிப்படை*

“கோவிட்-19 (COVID-19) தொற்று பரவல் தாக்கங்களைச் சமாளிப்பதில் நாம் ஒன்றிணைந்து பணியாற்றியுள்ளதால், நமது குடியிருப்புவாசிகள் மற்றும் வணிகர்களிடமிருந்து பல கருணைமிக்க, ஆதரவுஅளிக்கும் வகையிலான சமூகப்பற்று உணர்வினை கண்ணாரக் கண்டோம். ஒருவழியாக நகரை

நாம் மீண்டும் திறப்பதை நோக்கி செல்லும்போது இந்த நம்பமுடியாத உத்வேகத்தை உருவாக்குவோமாக.”

– *டேவிட் பேர்ரிக், தலைமை நிர்வாக அதிகாரி ப்ராம்ப்ட்டன் நகரம்*

-30-

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமூக ஈடுபாடு
யுக்திரீதியான தகவல்தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca